# இலங்கைக்கு அமெரிக்க ஆயுத உதவி தொடரும்

[வாஷிங்டன்]

இலங்கை அரசு உள்நாட்டுப் போரைச் சமாளிக்க அதற்குத் தொடர்ந்தும் ஆயுத உதவியை அமெரிக்கா வழங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்கா இலங்கையிடம் சில உத்தர

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 24 றமழான் 21 இதழ்: 56

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 07-04-1991


## படையுடன் சென்ற 'அம்புலன்ஸ்' கவிழ்ந்தது

[கொழும்பு]

வடபகுதியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் படுகாயமடைந்த படையினரை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் ஒன்று தலைகீழாக கவிழ்ந்துள்ளது.

கடந்தவாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரட்மலானை விமான நிலையத்திலிருந்து இராணுவ ஆஸ்பத்திரிக்கு இவர்களை ஏற்றிச்சென்ற

[4-ம் பக்கம் பார்க்க)

## வீமன்காமத்தில் மோதல் தீபன் வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

வீமன்காமம்இராணுவமுகாமிலிருந்து கடந்த வியாழன் வெளியேறமுற்பட்ட இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு அந்த முயற்சியை முறியடித்தனர்.

இத்தாக்குதலின்போது வீர வேங்கை தீபன் (சுப்பிரமணியம் சிவந்தகுமார் - வட்டுக்கோட்டை) வீரமரணமடைந்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## ● 48 மணிநேரத்தில்

# புலிகளின் அதிரடித் தாக்குதல்

# இருபத்திநாலு படையினர் பலி

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் கடந்த 48 மணிநேரத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 24 படையினர் உயிரிழந்துள்ளதுடன் 19 படையினர் படுகாயமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று கொழும்பில் தெரிவித்தன. படையினரின் ஆயுதங்கள் பலவும் காணாமல்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாகரையில் 11 படையினர், கொல்லப்பட்டு 8 பேர் படுகாயமடைந்துள்ளனர். வவுனியாவில் 5 படையினர் கொல்லப்பட்டு 8 பேர் படுகாயமடைந்துள்ளனர். காரைநகரில் உயர் அதிகாரி ஒருவர் உட்பட 4 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

திருமலையில் கண்ணிவெடியில் சிக்கி இருவரும், புலிகளின் தாக்குதலில் இம் மாவட்டத்தில்வேறோர் இடத்தில் இருபடையினரும் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர். (சி)

## புலிகள் தாக்குதல் 3 ஈ. பி. டி. பி. பலி

[கொழும்பு]

வவுனியா பம்பைமடுபகுதியில் இடம்பெற்ற மோதலில் புலிகளின் தாக்குதலில் 3 ஈ. பி. டி. பி.யினர் கொல்லப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வாகரையில் திடீர் தாக்குதல் பதினொரு இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் வீதி திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த படையினர்மீது புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 11 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். 8 படையினர் படுகாயமடைந்து பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## காரைநகர் மோதல் 4 படையினர் பலி

(கொழும்பு)

காரைநகர் கடற்படை முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் 4 படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடற்படை முகாம் மீது புலிகள் பசிலன், மோட்டார் தாக்குதலை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் கடற்படை உயர் அதிகாரி ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவலூர் இராணுவம் பின் நோக்கி நகர்வு?

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் தற்போது காலரண்களை பின்நோக்கி நகர்த்திச் செல்வ

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழர் பிரச்னையில் இந்தியாவின் அக்கறை

[கொழும்பு]

''இலங்கைத் தமிழர் பிரச்சனையைத் தீர்க்கவேண்டுமென இந்தியா அக்கறை கொள்வதில் நியாயமுண்டு.''

இவ்வாறு கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற இந்திய-இலங்கை நட்புறவுக்கூட்டத்தில் ஜனதிபதியின் ஆலோச

(4-ம பக்கம் பார்க்க)

## 225 இளைஞர்கள் விடுதலை

[கொழும்பு]

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 225 சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (ரி)

## அபிவிருத்திக்கான நிதி பாதுகாப்பிற்கு செலவு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட பணம் கடந்த பதினேழு வருடங்களாக பாதுகாப்பிற்கென செலவு செய்யப்பட்டு விரயமாக்கப்பட்டு வருகிறது.

தென்னிலங்கை கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்குமே இந்நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## கச்சதீவில் சூடு 3 அகதிகள் காயம்

(சென்னை)

கச்சதீவுக் கடலருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் மூவர் காயமடைந்தனர்.

மண்டபம் முகாமிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீன் பிடிப்பதற்குச் சென்ற போதே இச்சம்பவம் இடம் பெற்றதாக மண்டபத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (ரி)

## வவுனியா மோதலில் 5 படையினர் பலி

(கொழும்பு)

வவுனியாவில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் ஐந்து படையினர் பலியானர்கள். எட்டுப்பேர் காயமடைந்தவர் என்று ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் வவுனியா நெலுக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றினைத் தாக்க முற்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்ட 17 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ மண் மீட்புப் போராட்டத்தை நாம் தற்போது நடாத்திவருகின்றோம். அதற்கு இடையூறு விளைவிக்க முற்படுவோரை நாம் ஒரு போதும் மன்னிக்கமாட்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு "எந்த ஒரு ஆணும் வயதான காலத்தில் மனைவியை இழக்கக்கூடாது. எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக் கூடாது இழந்தால்? (சி 4606)

## பாலாஜீ புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாககுண்டம், ஆறுகால் மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4614)

## மணமக்கள்

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். விபரங்களுக்கு மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (சி-4619)

## அம்பாள் திருமண சேவை

B. Sc., B.A. Lecturer மணப் பெண்களின் ஜாதகக் குறிப்புக்கள் இருக்கின்றன. இவர்களுக்கு Doctor, Engineer, B. Sc., Lecturer மணமக்கள் தேவை; சின்னச் சாமிக் குருக்கள் - சண்முகம், வீரமாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். (சி 4616)

## தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு 30 வயதிற்கும் 50 வயதிற்குட்பட்ட கணக்கியல் இலிகிதர் (Accounts Clerk) தேவை. விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு கொள்ளக்கூடியவராகவும், தட்டச்சு தெரிந்தவராகவும் (Letters Correspondlng and Type-writing) இருத்தல் வேண்டும் முன் அனுபவ தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 1214, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்! [எ-1214]

## தேவை

சமூகசேவை நிறுவனத்தில் தங்கி பணிசெய்யும் ஆவல் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் தேவை. உணவு இருப்பிட வசதியுடன் ஊக்குவிப்பு உதவி பணமும் வழங்கப்படும். 15-04-91 க்கு முன் விண்ணப்பிக்கவும். C/o S.யோசப் பாலா 969/18, வளன்புரம், கொழும்புத்துறை. (சி4617)

## மஞ்சத் திருவிழா

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மஞ்சத் திருவிழா, இன்று 7ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (71)

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். திருக்குடும்ப கன்னியர் பாடசாலையின் இன்ரறக்ட் கழகத்தினர் விமானப் படையின் தாக்குதலால் அங்கவீனமுற்ற பாடசாலை மாணவி ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

செல்வி யசோதா (16வயது) என்ற உரும்பராயைச் சேர்ந்த மாணவிக்கு வழங்கப்பட்டது. (154)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 6 மணியிலிருந்து இப்பகுதிகளிலிருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக காரைநகர் ப. நோ. கூ. சங்க விற்பனை நிலையம் கிராமிய வங்கி ஆகியன வளர்க்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### மருத்துவ பீடம்

**பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிகள்**

இப்பரீட்சைகள் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற உள்ளன.

1. மருத்துவ பீடம் மூன்றாம் ஆண்டு (பகுதி 1; பகுதி 11) மீள் பரீட்சை — 13 வைகாசி 1991.
2. மருத்துவ பீடம் இரண்டாம் ஆண்டு பரீட்சை (1988 அனுமதி) — 3 யூன் 1991.
3. மருத்துவ பீடம் (பகுதி 1) பரீட்சை (1985 அனுமதி) — 1 யூலை 1991

(1), (2)ற்கான முடிவுத் திகதிகள் 22-4-91ம் (3)ற்கான முடிவுத் திகதி 10 06-91

இக்குறிப்பிட்ட திகதிகளுக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஏ 1213) பதிவாளர்.


# தமிழ் மொழிபெயர்ப்புடன் கடிதங்கள் அனுப்பவேண்டும்

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

தமிழ்மொழி பெயர்ப்புடன் கடிதங்களை அனுப்பி வைக்குமாறு மத்திய மாகாணசபை முதல்வருக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா பணித்துள்ளார்.

மத்திய மாகாணசபை கடிதங்கள் தமிழில் அனுப்பப்படுவதில்லையென்ற மாகாண சபை தமிழ் பிரதிநிதி ஒருவரின் முறைப்பாட்டினையடுத்தே ஜனாதிபதி இவ்வாறு பணித்துள்ளார்.

"தமிழ் பேசும் மக்களுக்கு அனுப்பி வைக்கும் கடிதங்களும் தஸ்தாவேஜுகளும் தமிழில் மொழிபெயர்ப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும்" என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இது தொடர்பாக எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மத்திய மாகாணசபை முதல்வரைக் கேட்டுள்ளார். (ரி)

## வெற்றிடங்கள் நிரப்பப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிருவாகத்தின் கீழ் உள்ள 11 வைத்தியசாலைகளின் வைத்தியப்பொறுப்பு அதிகாரிகள் வெற்றிடங்கள் வெகு விரைவில் நிரப்பப்படவிருக்கிறது.

அண்மையில் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (153)

## வற்றாப்பளை அம்மன் ஆலயம் சேதம்

[மாங்குளம்]

வன்னியில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களால் சேதமடைந்துள்ளது.

இவ்வாலயம் பல மாதங்களாக எவ்வித பூசையுமின்றிக் காட்சியளிக்கிறது. பக்தர்கள் வரவும் குறைவடைந்துள்ளது [150]

## திருத்தவேலை

(பருத்தித்துறை)

ஸ்ரீலங்கா அரச படைகளின் அட்டூழியங்களினால் பெருஞ்சேதத்திற்குள்ளான வல்வெட்டித்துறை சிவன் கோவிலும் வல்வெட்டித்துறை அம்மன் கோவிலும் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் வழமைபோல் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [52)

## மரண தண்டனை

(அம்பாறை)

விடுதலைப் புலிப் போராளிகளையும், அவர்களின் மறைவிடங்களையும், ஆதரவாளர்களையும் சிறிலங்கா இராணுவத்தினருக்கு நீண்ட நாட்களாகக் காட்டிக்கொடுத்து வந்த கோணாவிலைச் சேர்ந்த கில்பேட் என்பவருக்கு, அதே இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மரண தண்டனை வழங்கினர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. (வி)

## புதிய நிர்வாகிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை திருவள்ளுவர் சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. எஸ். நடேசன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்: சி நடேசன், உப தலைவர்: சி. மார்க்கண்டு, செயலாளர்: செ. இராசலிங்கம், உப-செயலாளர்: இ அன்ரனி, பொருளாளர்: க சின்னத்தம்பி, செயற்குழு உறுப்பினர்கள் செல்வி சி. பராசக்தி, செ. இராசையா, ஆ. ஐகேசன், வ. பாலச்சந்திரன். (52)

# மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள்

(பூநகரி)

வில்லிவில்லி கப்பலில்வந்த கிளிநொச்சி மாவட்டத்திற்கான இலவச பாடசாலைப் புத்தகங்கள் பூநகரி மகாவித்திற்கு எடுத்து வரப்பட்டது.

போக்குவரத்துவசதியின்மையால் சில வாரங்கள் தாமதித்து பூநகரி - கிளாலி துறைமுகம் ஊடாக புத்தகங்கள் பளைமகாவித்தியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இம்முறை இலவசப்பாடப் புத்தகங்கள் போதியளவு ஆரம்பத்தில் மாணவர்களுக்கு கிடைக்கின்றன.

# விவசாயப் பயிர்கள் அழிந்துபோகும் நிலை

(காங்கேசன்துறை)

கீரிமலையைச் சூழவுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் திடீரென இடம்பெயர்ந்தமையால் அங்கு செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த ஏராளமான விவசாயப் பயிர்கள் அழிந்துபோகும் நிலையிலுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை கீரிமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் கீரிமலையை சூழவுள்ள பகுதிகளிலிருந்து 1000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

இவர்களால் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயப் பயிர்கள் தொடர்ந்து பராமரிக்கப்படாமல் அழிந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (86)

## மாதாந்த உதவிப் பணம்

(காங்கேசன்துறை)

குப்பிளான் உபதபாற் கந்தோரில் நவம்பர் 1990 பொதுசன மாதாந்த உதவிப் பணத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதனை உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

சுன்னாகத்தில் வைத்து வழங்கப்படும் இந்த உதவிப் பணத்தை கூடிய கெதியில் பெறாதுவிட்டால் அதனை இழக்க நேரிடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)


## கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம்: 10-04-1991 3-00 p. m.

O/L படித்த இரு பாலாரும் சேரலாம்.

Computer Programming in Mathematics

INTRODUCTION TO COMPUTER
COMPUTER MATHEMATICS

BASIC PROGRAMING
IN MATHEMATICS

PASCAL PROGRAMMING
IN MATHEMATICS

ஆரம்பம்: 13-04-91 3-00 p. m.

A/L கணிதத்துறையில் சித்தியடைந்த மாணவர்கள் மட்டும் சேரலாம்.

மேலதிக விபரங்கட்கு

UNIKCO
COMPUTER
CENTRE

NO. 37, CLOCK
TOWER ROAD,
JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாகவுள்ள மேல்மாடி)




(ஏ-1215)

## ஜூலை 19-ம் திகதி

# தமிழ் மொழித் தின விழா

# கொழும்பில் நடைபெறும்

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் மொழித் தினவிழா ஜூலை 19-ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் வெற்றியீட்டிய வர்களுக்கான பரிசில்கள் இவ் விழாவில் வைத்து வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சுவாமி விபுலானந்தர் நினைவுதினமான ஜூலை 19ம் திகதி இவ்விழா நடத்தப்படும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ் மொழி பிரிவுப் பணிப்பாளர் வெ. சபாநாயகம் தெரிவித்துள்ளார். (ரி)

## நீர்வேலி கந்தசுவாமி

# கோவில் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் இம் மாதம் 10-ம் திகதி காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

14-ம் திகதி காலை 7 மணிக்கு சந்திராந்தி பூசையும், 17ம் திகதி கார்த்திகை உற்சவமும் 19ம் திகதி மஞ்ச உற்சவமும் 24ம் திகதி பிற்பகல் மாம்பழத் திருவிழாவும் 26-ம்திகதிசப்பற திருவிழாவும்| நடைபெறும்.

ரதோற்சவம், இம்மாதம் 27ம் திகதி காலை 8 மணிக்கும் மறுநாள் 28ம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் 29ம் திகதி திருக் கல்யாண உற்சவமும் நடைபெறும்.

# யாழ். அனுப்பப்பட்ட 1704 அடையாள அட்டைகள்

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் 1704 தேசிய அடையாள அட்டைகள் யாழ் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் புதிய தொலைந்த திருத்தம் செய்ய, பாடசாலை மூலம் விண்ணப்பம்செய்த சகலருக்கும் தேசிய அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இவற்றை யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (71)

# சனசமூக நிலையங்களில் நூலகங்கள் அவசியம்

(யாழ்ப்பாணம்)

''இன்றைய சூழ்நிலையில் சனசமூக நிலையம் போன்ற ஸ்தாபனங்கள் குழந்தைகளின் உள்ளங்களில் கல்வி ஒழுக்கம், கடமை போன்றவற்றை வளர்த்தெடுக்க வேண்டும்.''

இவ்வாறு யாழ், மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பொ. பாலசிங்கம் நல்லூர் மூத்தவியாநகர் சனசமூக நிலையத் திறப்பு விழாவின்போது குறிப்பிட்டார்.

திரு. இ. கணேசன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

முக்கியமாக ஒவ்வொரு சனசமூக நிலையமும் வாசிப்புத் திறனை மேம்படுத்த நூலகங்கள் அமைக்க வேண்டும். அது மட்டுமல்லாது மக்களுக்குத் தேவையான உணவு விநியோகம் போன்ற சேவைகளையும் செய்ய முன்வரவேண்டும். (152)

## ஈழகேசரி பொன்னையாவிற்கு

# ஈழத்து புதினப் பத்திரிகை வளர்ச்சியில்பெரும்பங்குண்டு

(யாழ்ப்பாணம்)

''ஈழகேசரியின் வரலாற்றினுள் நமது சமூகத்தின் வரலாறும் அதன் அசைவியக்கப் பண்பு இரகசியங்களும் நிறைய உள்ளன'' என்று கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி ''ஈழகேசரி'' நா. பொன்னையா நினைவுப் பேருரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''இலங்கையின் புதினப்பத்திரிகையின் வளர்ச்சியில் ஈழத்துத் தமிழ்ப் புதினப் பத்திரிகை வளர்ச்சியில் நா. பொன்னையாவுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. கொழும்பிலிருந்து நாளிதழ்கள் வருமுன்னரே செய்தி தருகையில் இலங்கைத் தமிழ் நிலைப்பட்ட சில புதிய பரிமாணங்களை ஏற்படுத்திக்கொண்ட பெருமை திரு. பொன்னையாவை சார்ந்ததாகும்'' என்றார். (152)

## சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த பாலசுந்தரம் ரவீந்திரன் என்பவர் புளொட் இயக்கத்தினரால் நேற்று முன் தினம் காலை 8-00 மணியளவில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். [வீ]

## இராசி பலன்

**07-04-1991**

**ஞாயிறுக்கிழமை**

அட்டமி ந.இ. 12-03வரை, பூராடம் பி. ப. 5-54 வரை, சித்தாமிர்தயோகம்.

இராகுகாலம் மாலை 4-38 முதல் 6-08 வரை;

சுபநேரம் காலை 9-08 முதல் 10-38 வரை;

மேடம்; மன அமைதி குன்றல், வீண்யோசனை, தொழில் பாதிப்பு, சோர்வு.

இடபம்: கூடல் உபாதை, பணக்கஷ்டம், வாக்குகலகம், வீண்வம்பு.

மிதுனம்: காரியசித்தி, தொழில் லாபம், குடும்பத்தில் சுபகாரியம்.

கடகம்; குடும்பச் செலவு, தொழில் மூலமான அலைச்சல், புத்திரர் பெருமை

சிங்கம்: அதிபர்நேசம், தொழில் தகராறு, குடும்ப கஷ்டம்.

கன்னி: வைத்திய செலவு, குடும்பத்தில் கருத்துமுரண்பாடு, அலைச்சல்.

துலாம்; நண்பர்கள் உதவி, வாக்கு வன்மை, தொழில் நஷ்டம்.

விருச்சிகம்; அந்நியவாசம், பயணங்களால் துன்பம், மனக்குறை

தனுசு: தொழில் பாராட்டு, வசதிகள் அதிகரிப்பு, குடும்ப சுகம்.

மகரம், பழைய நினைவுகள், பெண்பகை, கடிதத்தொல்லை, கவலை.

கும்பம்: புதிய ஸ்தானம் பயணங்களால் அனுகூலம் பணவரவு.

மீனம்; தாயன்பு, சகோதர உதவி, குடும்ப மகிழ்ச்சி, புகழ்.

— ஜோஸ்யர்

# ''இயற்கை வளங்களைப் பயன்படுத்தினால் பிரச்சனைகள் மத்தியிலும் நிம்மதியாக வாழமுடியும்''

(யாழ்ப்பாணம்)

''இயற்கையன்னை எமக்களித்த வழங்களைப் பயன்படுத்தி வாழப்பழகிக் கொண்டால் பிரச்சனைகள் மத்தியிலும் நாம் நிம்மதியாக வாழமுடியும்'' என்று நவில்ட் பாடசாலை துணை அதிபர் திரு. சே. கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து மந்துவில் பகுதியில் அகதிகளாக இருந்த பதினான்கு குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழுவினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. கோபாலகிருஷ்ணன் மேலும் அங்கு பேசுகையில் ''எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டின் எத்தகைய துன்பங்களையும் தாங்க கூடியவர்களாக இருக்கவேண்டும் இன்று வரையும் எத்தனையோ துன்பங்களைத்தாங்கிக் கொண்டு வாழ்கிறோம். எனவே இனி எத்தகைய பிரச்சனைகள் வந்தாலும் நாம் தாங்கிக் கொள்ளுவோம் என்று தெரிவித்தார்.

தென்மராட்சி உ. அ. அதிபர் பூ. சுந்தரம்பிள்ளை, த. நவரத்தினராசா, டாக்டர்கள் பே. பிலிப்ஸ், எஸ். அருளானந்தம், க. ஜீவகதாஸ் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்

இந்த வீடுகளைப் பெற்ற 14 குடும்பங்களுக்கும் குசினிப்பாத்திரங்களும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் அறவழிப்போராட்டக்குழுவினால் வழங்கப்பட்டது.

## திருநெல்வேலியில் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் சீரற்ற நிலைமை காரணமாகத் தடைப்பட்டிருந்த கால்நடைகளுக்கான செயற்கைமுறை சினைப்படுத்தும் சேவை மீண்டும் திருநெல்வெலியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேவையினைப் பெற விரும்புவோர் சிறுப்பிட்டியில் உள்ள மிருக வைத்திய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இதற்குப் பொறுப்பான அதிகாரி திரு. ந. விநாயகராசா தெரிவித்துள்ளார். (154)

## தேர்தல் தலைமையகம் மீது

# துப்பாக்கிச் சூடு!

[புதுடில்லி]

இந்தியத தேர்தல் ஆணைக்குழு தலைமையகம் மீது துப்பாக்கிச்சூடு அண்மையில் இனந்தெரியாத கும்பலொன்றினால் நடத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை தற்போது நடாத்தி வருகின்றனர். (ரி)

# இரவில் மாயமாக மறைந்த வெட்டிவைத்த நெற்சூடு

[நாவற்குழி]

வெட்டி வைக்கப்பட்ட சூடு இரவோடிரவாக மாயமாக மறைந்தது.

நுணுவில் கிழக்குப் பகுதியில் உள்ள வயல் ஒன்றில் வெட்டிவைக்கப்பட்டநெற்சூடு ஒன்றை அடிப்பதற்காக வயலிற்குச் சென்ற வயல் சொந்தக்காரர் அங்கு சூட்டின் அரைப்பகுதி மாயமாக மறைந்திருந்ததைக் கண்டு பிடித்தார். (107)

# தமிழகத்தில் 1 லட்சத்திற்கும் அதிகமான அகதிகள்

(சென்னை)

தமிழ்நாடு மாநிலத்தில் 245 அகதி முகாம்களில் 1-லட்சத்து 22 ஆயிரத்து 64 இலங்கைத் தமிழ் அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக மாநிலச்சீர்திருத்த சிறப்பு ஆணையாளர் திரு. எம், ராமதாஸ் கூறியுள்ளார். இவர்களுக்கு 13 நாட்களுக்கொருமுறை வழங்கப்படும் நிவாரண உதவி இம்மாதம் புதுவருடத்தை முன்னிட்டு 12ம் திகதி வழங்கப்படவுள்ளன என்றும் அவர்களுக்குள்ள குடிநீர் பிரச்சனைக்கு தீர்வுகாணும் முகமாக லொறிகள் மூலம் குடிநீரும் ஒழுங்காக வழங்கப்படும் எனவும் திரு. ராமதாஸ் தெரிவித்தார். (பூ)

# பெரு நாட்டில் நிலநடுக்கம்: பதினேழு பொதுமக்கள் பலி

(லீமா)

பெருநாட்டில் நேற்று முன் தினம் இடம் பெற்ற நிலநடுக்கத்தினால் பதினேழு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பெருநாட்டின் வடபகுதியில் நேற்று முன்தினம் மாலை 5-00 மணியளவில் இந்நில நடுக்கம் ஏற்பட்டது.

இந்நில நடுக்கத்தினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரி)

# மத்திய மாகாணசபையில் தமிழ்மொழி புறக்கணிப்பு

(கண்டி)

மத்திய மாகாண சபை அமைச்சுக்களினுல் தமிழ் புறக்கணிக்கப்படுவதாகபுகார் தெரிவிக்கப்படுகிறது

இந்த மாகாணசபை அமைச்சுக்களினுல் எழுதப்படும் கடிதங்கள் மற்றும்தஸ்தா வேஜுகள் தனிச்சிங்கள மொழியில் அனுப்பப்பட்டுவருகிறது.

இதனுல் சிங்கள மொழி தெரியாத தமிழ் மக்கள் பெரும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மொழிப்பிரயோகம் மத்திய மாகாணசபையில் முறையாக அமுல்படுத்தப் படவில்லை என்று தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான வி கந்தையா தெரிவித்தார். (ரி.)

# ஹரியாணு சட்டசபை நேற்று கலைக்கப்பட்டது

(ஹரியாணு)

ஹரியாணு சட்டசபை நேற்று கலைக்கப்பட்டது. இம் மாநிலமும் ஜனுதிபதியின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

ஹரியாணு முதல்அமைச்சர் ஓம் பிரகாஷ்சௌத்தாலா இம் மாநில சட்டசபையை கலைக்குமாறு முன்னதாக வேண்டுகோள் விடுத்திருந்தும், எதிர்க்கட்சியினரின் தலையீட்டால் இழுபறி நிலையில் நிலைமை இருந்து வந்தது.

மாநில சட்டசபை தேர்தலையும் லோக்சபா தேர்தலுடன் நடாத்தப் போவதாக தலைமை தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# காரைநகரிலிருந்து தொடர்ந்து ஷெல் வீச்சு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கடற்படையினர் கடந்த சில தினங்களாக ஊர்காவற்றுறையில் களிக்கரை, மெலிஞ்சிமுனை பருத்தியடைப்பை நோக்கி தினமும் ஷெல் தாக்குதலை நடாத்தி வருகின்றனர்.

இப்பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிய வருகின்றது. (59)

# கண்ணிவெடியில் ட்ரக் சிதறியது

[திருகோணமலை]

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அலிஒலுவ இராணுவ முகாமிலிருந்து வெளியேவந்த ட்ரக் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி முற்ருகச் சிதறியது.

ட்ரக்கில் வந்த பல இராணுவத்தினரும் இறந்துள்ளனர்.

இத்தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது. (பூ-க)

## அபிவிருத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் அபிவிருத்திக்கென உலகநாடுகளிடம் கையேந்தி வாங்கும் நிதி இவ்வாறு விரயமாக்கப்படுவது குறித்து ஜனுதிபதி ஆர். பிரேமதாஸா கவலை தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று நடமாடும் ஜனுதிபதி செயலகத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் தனது கவலையை வெளியிட்டார். (ரி)

# நிரந்தர யுத்த நிறுத்தம் ஈராக் கவலையுடன் ஏற்கிறது

(பக்தாத்)

பாரசீக வளைகுடாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படுத்தும் முகமாக ஐக்கிய நாட்டு பாதுகாப்புசபை விதித்திருந்த நிபந்தனைகளை ஈராக் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதன்படி ஈராக், குவைத்துடனுன 1963 ஆம் ஆண்டின் எல்லை நிர்ணயத்தை ஏற்க வேண்டும்.

ஈராக் தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்களை அழித்து விடவேண்டும்.

ஈராக் எண்ணை ஏற்றுமதி வருவாயின் ஒருபகுதியை குவைத்துக்கு போர்காலத்து அழிவை புனர்நிர்மாணம் செய்ய வழங்க வேண்டும்.

வேறுவழியின்றி இந்த நிபந்தனைகளை தாம் ஏற்பதாக ஈராக்கிய சபாநாயகர் தெரிவித்துள்ளனர். (பூ)

## அயோத்தி சர்ச்சை 2000 பேர் பலி

[புதுடில்லி]

அயோத்தி நகரில் ராமர் ஆலயம் கட்டுவதுதொடர்பான சர்ச்சையில் இதுவரை 2000 பேர் பலியாகியுள்ளனர்.

சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் ஆலயத்தை கட்டியே தீருவோமென பாரதீயஜனதா கட்சி மீண்டும் கூறியுள்ளது.

இம்முறை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி ராமர் ஆலய பிரச்சனையை முன்வைத்தே வாக்குகளைத்திரட்ட முற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தமிழர் பிரச்னை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கர் திரு. பிரட்மன் வீரக்கோன் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசும் போது;

தமிழர் பிரச்னைக்கு இலங்கையில் தீர்வு ஏற்படாமல் போவதால் தமிழ் நாட்டில் அதன் பிரதிபலிப்பை இந்தியா உணரவேண்டியுள்ளது. அத்துடன் பிரிவினைக் கோரிக்கை தமிழ்நாட்டில் பரவுவதோடு இலங்கை அகதிகள் அதிகரிப்பும் ஏற்படுகிறது

87ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருந்ததாகவும் அவர் கூறினுர். (பூ)

## புலிகள் தாக்குதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டும் நால்வர் படுகாயமடைந்துமுள்ளனர்.

நேற்று கொழும்பில் இராணுவ தலைமைப்பீடம் விடுத்த அறிக்கையில் இத்தகவல்குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் இம் மோதல் இடம்பெற்றது. படையினருக்கு வழிகாட்ட இவர்கள் அழைத்துவரப்பட்டிருந்தனராம். (சி)

# 4 சிங்களவர் திருமலையில்கொலை

(திருமலை)

திருமலையில் நேற்று முன்தினம் 4 சிங்களவர் இனந்தெரியாதோரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இராணுவ முகாம் ஒன்றிற்கருகிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீதியால் இவர்கள் நடந்து செல்கையிலேயே கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனராம். (சி)

## காவலூர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறப்படுகிறது.

முன்பு ஊர்காவற்துறை ஆஸ்பத்திரி வரையிருந்த படையினர் தற்போது அங்கிருந்து சென். அன்ரனிஸ், சென். செபஸ்தியார் தேவாலயங்களையும் தாண்டிப் பின் நோக்கிச் சென்றுள்ளதாக அங்கிருந்து வந்த பலர் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் இப்பகுதியில் கடும் மோதல் நடைபெற்றதும் தெரிந்ததே. (சி)

## தடுத்து

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டோம் ''

இவ்வாறு யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் கூறினுர்.

பல்வேறு காரணங்களுக்காக விடுதலை புலிகளினுல் தடுத்து வைக்கப்பட்டவர்களில் 17 பேரை நேற்றுப்பகல் 11 மணியளவில் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் வைத்துப் பெற்ருேரிடம் ஒப்படைத்து திரு. ராஜன் மேலும் கூறியதாவது;-

விடுதலைப்புலிகள் யாரையும் எதிரிகளாக நினைப்பதில்லை. எதிரிகளாக மாறி எம்மை எதிர்த்தவர்களையும் நாம் மன்னித்துள்ளோம். எமது இலட்சியங்களின் தத்துவத்தை உணர்ந்த அவர்களில் பலர், இன்று எம்முடன் இணைந்து தமிழீழ மீட்புப் போராட்டத்தில் முக்கியபங்கு வகித்துவருகின்ருர்கள்.

அதைப்போல் நீங்களும் எம்முடன் இணைந்து உங்கள் பங்களிப்பை அளிக்க முன் வாருங்கள், இல்லாவிட்டால், எமது போராட்டத்துக்கு இடையூறு விளைவிக்காமல், உங்கள் குடும்பத்துடன் சேர்ந்து அமைதியான வாழ்க்கையை நடாத்த முற்படுங்கள்'' என்ருர். (வி)

## புங்குடுதீவில் பொம்மர் தாக்கு

[வேலணை]

புங்குடுதீவு பகுதியில்நேற்று மாலை 6-30 மணியளவில் பொம்மர் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இருபொம்மர்கள் 4 குண்டுகளை இப்பகுதியில் வீசித்தாக்கின.

இப்பகுதியில் பொம்மர் தாக்குதல் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை. (75)

# யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

[புதுடில்லி]

இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்று இரண்டு இராணுவ ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன. இருதரப்புயுத்தத்தை தவிர்ப்பதற்கானதொரு ஒப்பந்தமாகவே இது கருதப்படுகிறது.

ஒரு நாட்டின் யுத்தவிமானம் மற்ற நாட்டின் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுத்தல், இராணுவ பயிற்சி மற்றும் துருப்புக்கள் நடமாட்டம்பற்றி முன்னதாகவேநாட்டுக்குநாடு அறிவித்தல்போன்ற விடயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் வான் அத்துமீறலைத் தவிர்த்து ஓர்நாட்டுஇராணுவ விமானம் மற்றநாட்டு எல்லைக்குள் தரையிறங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் இவ்வொப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர். (பூ)

## வாகரையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன் தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இவ் அதிரடித்தாக்குதலை சமாளிக்க முடியாத இராணுவம் தமது வேலையை இடையில் விட்டுவிட்டு முகாம்நோக்கி இழப்புகளுடன் பின்வாங்கியது.

இத்தாக்குதலில் புலிகளால் பெருமளவுஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. (சி)

## வீமன்காமத்தில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்னர். [பூ-க]

## படையுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'அம்புலன்ஸ்'சே தலை கீழாக கவிழ்ந்ததாம்.

எனினும் காயமடைந்த படையினரோ, சாரதியோ பலியாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது இருபகுதியினரிடையேயும் பலத்த சண்டை இடம் பெற்றதாகவும் இச்சண்டையிலே 5 படையினர் கொல்லப் பட்டதாகவும் எட்டு படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## இலங்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாதங்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

அண்மைகாலமாக இலங்கை படைகள் அமெரிக்க ஆயுதங்களை பாவித்து வருவது தெரிந்ததே.

ஈராக்குடன் யுத்தத்தில் அமெரிக்க பன்னூட்டு படை விமானங்கள் இங்கு எரிபொருள் நிரப்ப அரசு அனுமதித்ததும் தெரிந்ததே. (சி)

## மரண அறிவித்தல்

### சபாலிங்கம் உதயலிங்கம்

[ரஞ்சன்]

சபாலிங்கம் உதயலிங்கம் பிரித்தானிய தொலைத் தொடர்பு பொறியியலாளர் லண்டனில் 4-4-91 அன்று காலமானுர். அன்னுர் பிரேமரூபாவின் அன்புக்கணவரும், சாரங்கன், சரவணன் ஆகியோரின் அருமைத் தகப்பனுரும், காலஞ்சென்ற திரு. திருமதி இளையதம்பி சபாலிங்கம் [முன்னுள் கல்லூரி அதிபர்] அவர்களின் அன்பு மகனும், வைத்திய ஆலோசகர் ஜோதிலிங்கம் [லண்டன்], திருமதி ராஜினி புவனேந்திரராஜ் [கோலாலம்பூர்], திருமதி ஜெகதாம்பிகை ஆனந்த பாஸ்கரன் [லண்டன்], திருமதி உதயகுமாரி மகேந்திரன் [பாரேன்], ஜெயலிங்கம் பொறியியலாளர் [லண்டன்], அபயலிங்கம் [கணக்காளர் - லண்டன்], திருமதி கலைச்செல்வி நவேந்திரன் [கணக்காளர்- லண்டன்], ஆகியோரின் அன்புச் சகோதரனும், இ கனகலிங்கம் முன்னுள் கல்லூரி அதிபரின் பெருமகனும் ஆவார்.

தகவல்:

98, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

இ. கனகலிங்கம்
(சி 4621)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number: B/100906/81.